# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 10 புதன்கிழமை 23.04.2025 கதிர் 165


## இனிது ரகசியம் அல்ல!

யாழ். மாநகர சபைக்கான போட்டியிலிருந்து தமிழ் மக்கள் கூட்டணியின்மணிவண்ணன்தரப்பு விலக்கப்பட்டது குறித்து நேற்றுத் தெரிவித்திருந்தேன். இந்த ☞ 2

## பாப்பரசரின் இறுதிச்சடங்கு சனிக்கிழமை

பாப்பரசர்பிரான்சிஸின்இறுதிச்சடங்குகள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு (GMT 08:00) வத்திக்கானின் புனித பீட்டர்ஸ் பசிலிக்காவிற்கு முன்னால்உள்ளசதுக்கத்தில் நடைபெறும் என்று வத்திக்கான் நேற்று அறிவித்தது.

பாப்பரசர்தனது 88 வயதில்திங்கட்கிழமை இறந்தார். அர்ஜென்டினாவைச்சேர்ந்தவரான பாப்பரசரின் பூதவுடல் அடங்கிய பேழை தேவாலயத்திற்குள்கொண்டுசெல்லப்பட்டு, ☞ 2

# ஈஸ்டர் தாக்குதல் குறித்த இரு மர்மங்கள் துலங்கின

### 4 கேள்விகளுக்கு விடை தேடவேண்டும்

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பானதீர்க்கப்படாதஆறுகேள்விகளில் இரண்டுஇப்போதுதீர்க்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ளநான்குகேள்விகளுக்கும்விரைவில் விடை காணப்படும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கூறுகிறார்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி, வவுணதீவு இரட்டைக்கொலைவிசாரணையைதவறாக வழிநடத்த அங்கு தற்கொலையாளிகளின் ஜாக்கெட் வைத்ததற்கு காரணமான நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று தெரிவித்தார். அதேபோன்று அமெரிக்காவின்எம்.பி.ஐ.(பெடரல்பிரோஒவ் இன்வெஸ்டிகேசன்) ஐ.எம்.ஈ. எண்ணுடன் இணைக்கப்பட்டஅலைபேசியின்உரிமையாளர் கண்டுபிடிக்கப்பட்டார்என்பதையும்ஜனாதிபதி அங்கு தெரியப்படுத்தினார்.

'இவை தீர்க்கப்பட வேண்டிய இரண்டு முக்கியமான பிரச்சினைகளாக இருந்தன - இப்போது அவற்றை நாங்கள் தீர்த்துவிட்டோம்,' என்று அவர் ☞ 2

## மக்கள் முன்னணியின் அமைப்பாளர் கைது

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் சற்குணதேவி மருதங்கேணி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மருதங்கேணி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட தனது மகனை பார்ப்பதற்காக சென்றவேளை அவர் கைதுசெய்யப்பட்டார்.

தமிழ்தேசியமக்கள்முன்னணியின் ☞ 2

# ஹெகலிய மீதான வழக்கில் 'ட்ரயல் அட்பார்' விசாரணை

### சட்டமா அதிபர் திணைக்களம் கோருகிறது

தரமற்றஇம்யூனோகுளோபின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்து மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான வழக்கை விசாரணையை மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முன்பாக 'ட்ரயல் அட் பார்' முறையில் மேற்கொள்ள சட்டமா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பான சட்டமா அதிபரின் எழுத்துப்பூர்வ கடிதம் தலைமை நீதிபதியிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் கெஹெலிய ரம்புக்வெல்ல 7 மாதங்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டார், அதன் பிறகு அவருக்கு 2024 செப்டம்பரில் பிணை வழங்கப்பட்டது.

இரண்டு மூத்த அரசு அதிகாரிகளின் உதவியுடன் போலி ஆவணங்களை உருவாக்கி ஒரு மருந்து நிறுவனம் 22,500 தரமற்ற இம்யூனோ குளோபின் தடுப்பூசி குப்பிகளை இறக்குமதி செய்ததாக எழுந்த குற்றச்சாட்டுகள் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணையைத் தொடங்கிய பின்னர், சுகாதார அமைச்சு அதிகாரிகள் பலருடன் ☞ 2

## பெரமுனவின் வேட்பாளர் சுட்டதில் ஒருவர் உயிரிழப்பு

### கட்டானவில் நேற்றுச் சம்பவம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார் என்று கட்டான பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 35 வயதான ரோஷன் பரணவிதான என்றும் பொலிஸார் தெரிவித்தனர். ☞ 2

## மாத்தறை சிறையில் பதற்றம் எச்சரிக்கை வேட்டுக்கள் தீர்ப்பு

மாத்தறைசிறைச்சாலையில்நேற்றுப்பிற்பகல் சிறைச்சாலை அதிகாரிகள் பல கைதிகளை வேறு சிறைச்சாலைக்கு மாற்ற முயன்றபோது பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டது.

சிறைச்சாலை வட்டார தகவல்களின்படி, சக கைதிகளை மாற்றுவதற்கு கைதிகள் குழு எதிர்ப்புத் தெரிவித்ததால் அமைதியின்மை தொடங்கியது. சிறையின் ஒரு பகுதியைச் சேர்ந்த கைதிகள் வெளியேறி ஒழுங்கீனமாக நடந்துகொண்டனர் எனவும், வேறு சில கைதிகளுடன் மோதத் தொடங்கினர் என்றும் சிறைக் காவலர்கள் தெரிவிக்கின்றனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்தும் முயற்சியில், சிறைச்சாலை அதிகாரிகள் வானத்தை நோக்கி எச்சரிக்கை துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதன் பின்னர் நிலைமை தற்போது ஓரளவு கட்டுப்பாட்டின் கீழ் ☞ 2

## பிள்ளையான் மீது மேலும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள்

கிழக்குப்பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் காணாமற்போனமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் மீது, மேலும் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்று ஆளும்தரப்பு நேற்று (21) அறிவித்தது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்தஜயதிஸ்ஸ, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் இதனைத் ☞ 2

## கட்டுநாயக்கவில் தொழிலதிபரை சுட்டுக்கொல்லும் முயற்சி தோல்வி

### சந்தேகநபர் ஒருவர் கைது

கட்டுநாயக்க, அடியம்பலம பகுதியில் தொழிலதிபர் ஒருவரை நேற்றுச் சுட்டுக்கொல்லும் முயற்சி துப்பாக்கி இயங்க மறுத்த காரணத்தால் தோல்வியில் முடிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த முயற்சியில் ஈடுபட்ட ☞ 2

# அரச சேவையில் ஆட்குறைப்பு பற்றி வாக்களிக்க முன் சிந்திக்கவேண்டும்

### அரச பணியாளர்களிடம் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

அரச சேவையில் ஆட்குறைப்பையே ஆளும்தரப்பு செய்கிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டுக்கமைய அரச சேவையில் சுமைகளைக் குறைக்க வேண்டிய கட்டாயம் ஆளும்தரப்புக்கு உள்ளது. தபால் மூல வாக்களிப்பில் ஈடுபடவுள்ள அரச பணியாளர்கள் இது குறித்து சிந்திக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு ☞ 2

## சமூக ஆர்வலர் மீது நேற்று துப்பாக்கிச்சூடு

சமூக ஆர்வலரான டான் பிரியசாத், நேற்றுப் பகல் அடையாளம் தெரியாத ஒரு துப்பாக்கிதாரியால் சுடப்பட்டு, கொழும்பு தேசிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத ஒருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் டான் பிரியசாத் இறந்துவிட்டார் என்று ☞ 2

## எதற்கு இத்தனை பதற்றம்?

### எதிர்க் கட்சிகளை பார்த்துக் கேட்கிறார் அமைச்சரவை பேச்சாளர்

இன்றைய எதிர்க் கட்சிகள் ஆட்சியில் இருக்கும்போதே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றன. அப்படியிருக்க எமது ஆட்சியில் இடம்பெறும் அந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து எதிர்க் கட்சிகள் ஏன் இவ்வளவு பதற்றமடைகின்றன என்று கேள்வி எழுப்பினார் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. அங்கு இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது எதிர்க்கட்சியிலிருப்பவர்களது ஆட்சியிலேயே உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில் இந்த விவகாரத்தில் அவர்கள் எதற்காக இந்தளவுக்கு பதற்றமடைகின்றனர் என்பது எமக்கு புரியவில்லை. ☞ 2

## இனி இது .....

நிலையில் யாருக்கு அவர்களின் ஆதரவு என்பது குறித்தும் கேள்வி எழுப்பியிருந்தேன். நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த மணிவண்ணன், யாழ்ப்பாணத்தில் மாநகர சபை உட்பட சில சபைகளில் தம்மால் போட்டியிட முடியாது போனமை தொடர்பில் ஆளும்தரப்பை ஒரு பிடி பிடித்தார். மகிந்த ஆட்சியைவிட மோசமானது அநுரவின் ஆட்சி என்று கடுமையாகச் சாடினார். அதேநேரம் தாம் போட்டியிடாத சபைகளில் வேறு எந்தக் கட்சிக்குத் தமது ஆதரவு என்பதை விரைவில் அறிவிப்போம் என்றும் தெரிவித்தார்.

தேர்தலுக்கு இன்னும் 13 நாள்களே இருக்கும் நிலையில் யாழ். மாநகர சபையினுள் மணிவண்ணன் தரப்பின் ஆதரவு யாருக்கு என்பது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. மணிவண்ணன் தரப்பு மாநகர சபையில் போட்டியிடவில்லை என்றதும் அந்த வாக்குகளை மீண்டும் தமது பக்கம் திருப்புவதற்கான கடுமையான முயற்சியில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது.

தமது கட்சித் தலைவர் கஜேந்திரகுமாரை முன்னிலைப்படுத்தி சுவரொட்டிகள் மாநகர சபை எங்கும் ஒட்டப்பட்டுள்ளன. காங்கிரஸும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் வேறு எந்தச் சபைகளையும்விட யாழ். மாநகர சபையிலேயே இத்தகைய தீவிர சுவரொட்டிப் பரப்புரையில் ஈடுபட்டுள்ளது. அதிலும் குறிப்பிடவேண்டிய மற்றொரு அம்சம். இம்முறை தேர்தலில் தமிழ்த் தேசியப் பேரவை என்ற பெயரில் தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ் அரசிலிருந்து பிரிந்தவர்கள் அணி, ஐங்கரநேசனின் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மற்றும் அருந்தவபாலன் ஆகியோர் இணைந்து ஒரு அரசியல் கூட்டை உருவாக்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டாலும் இந்தச் சுவரொட்டிகள் எவற்றிலும் இந்தக் கூட்டணித் தலைவர்களுக்கு இடமில்லை. தனியே கஜேந்திரகுமாரின் படத்திற்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய தலைவர்களின் படங்களைப் போட்டால் கிடைக்கின்ற வாக்கும் கிடைக்காது என்று நினைத்தார்களா அல்லது தமது பரப்புரை மூலம் அவர்களுக்கு பேரும் புகழும் சென்றடைந்துவிடக்கூடாது என்று கருதினார்களா என்பது தெரியாது. ஆனால், கஜேந்திரகுமார் படத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்படி உள் அரசியல் ஒருபுறம் இருக்க மாநகர சபையில் காங்கிரஸ் தீவிர பரப்புரையை முன்னெடுக்க, மணிவண்ணன் தரப்பின் ஆதரவை தமது பக்கத்திற்குப் பெறுவதற்கான பேச்சுக்களை தமிழ் அரசுத் தரப்பும் மேற்கொள்ளும் என்று தெரிகிறது. இது தொடர்பில் மணி தரப்புடன் பேசத் தயாராகக் கட்சி இருக்கும். ஆனால், மாநகர சபையில் தமிழ் அரசை ஆதரிப்பதாக அறிவிப்பதற்காக நல்லூர் உள்ளிட்ட வேறு சில சபைகளில் வெற்றி பெற்றால் சபைத் தலைவர்பதவிதங்களுக்குத்தரப்படவேண்டும் என்ற பேரத்தை முன்வைப்பதற்கு மணி தரப்பினரும் தயாராகி வருகின்றனர் என்று கேள்வி. அத்தகைய பேரம் பேசல் ஒன்றுக்கு தமிழ் அரசு தயாராக இருக்காது என்பதால், அல்லது தேர்தலுக்குப் பின்னர் அதுபற்றிப்பேசிக்கொள்ளலாம் என்பதே தமது நிலைப்பாடு என்று தமிழ் அரசு விடாப்பிடியாக நிற்கும் என்பதால் மணி தரப்பின் ஆதரவு யாருக்கு என்பது பெரும்பாலும் இறுதித் தருணம் வரையில் மர்மமாகவே நீடிக்கும் வாய்ப்புக்களே அதிகம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஈஸ்டர்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்.

தாக்குதல்களுக்குப் பின்னால் உள்ள உண்மையான சூத்திரதாரிகளை மறைக்க ஐந்தரை ஆண்டு விசாரணைகளைப் பயன்படுத்தியதாக முந்தைய நிர்வாகங்கள் மீது ஜனாதிபதி திசாநாயக்க குற்றம் சாட்டினார். உண்மையை வெளிக்கொணர்வதற்கும் நீதி வழங்குவதற்கும் தனது ஆளும்தரப்பு முழுமையாக உறுதிபூண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## சமூக ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் முன்னர் கூறியிருந்தாலும், அது தவறு காரணமாக நிகழ்ந்தது என்பது பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது.

பிழையைச் சரிசெய்து, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான டான் பிரியசாத் தற்போது கொழும்பு தேசிய மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## கட்டுநாயக்கவில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரில் ஒருவரை பிரதேசவாசிகள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். தப்பிச் சென்ற மற்றவர் தேடப்பட்டு வருகின்றார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு சந்தேகநபர்கள் அந்தப் பகுதியில் ஒரு தொழிலதிபரின் வீட்டுக்குள் நுழைந்து அவரைச் சுட முயன்றுள்ளனர். ஆனால் அவர்கள் வைத்திருந்த துப்பாக்கி சுடத் தவறியதால், இந்தக் கொலை முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

துப்பாக்கிச் சூடு முயற்சி தொடர்பாக ஒரு துப்பாக்கிதாரி ஆயுதத்துடன் கைது செய்யப்பட்டார், மற்றொருவர் தப்பிச் சென்றார் என்று கூறப்படுகிறது. குற்றவாளிகளில் ஒருவர் அம்பாறையைச் சேர்ந்த 33 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஆயுதம் செயல்படாததால், சந்தேகநபர்கள் வீட்டின் சுவர் மீது ஏறிப் பாய்ந்து தப்பிச் செல்ல முயன்றுள்ளனர். இதன்போது காயமடைந்த ஒருவரை அப்பகுதி மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர், பின்னர் அவர் நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சுடும் முயற்சியில் பயன்படுத்தப்பட்ட பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தையும் மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## அரச ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி யார் என்பது வெளிப்படுத்தப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். ஆனால் தற்போது அதற்கு இன்னும் கால அவகாசம் தேவையென்கின்றனர். இதுவும் மக்களை ஏமாற்றுமொரு நாடகமாகும்.

ஆளுமதரப்பின் பொய்களை மக்கள் உணர்ந்து கொண்டுள்ளதால்தான் இன்று ஜே.வி.பி. ஆடையணிந்த இளைஞர்களையோ, ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட முச்சக்கரவண்டிகளையோ காண முடியாதுள்ளது.

இதற்கு முன்னர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் பொய் கூறினர். எதிர்பார்த்ததைப் போன்று அதிகாரம் கிடைத்துள்ளது. அவ்வாறெனில் இனியாவது பொய்கூறுவதைநிறுத்துமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம். செய்யமுடியாதவற்றை தவிர்த்து செய்யக்கூடியவற்றை மக்களிடம் சென்று கூறுங்கள்.

தேர்தலுக்கு முன்னர் அரச பணியாளர்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கினர். ஆனால் தற்போது அவர்களை அச்சுறுத்துகின்றனர். அரச உத்தியோகத்தர்கள் இதனைப் புரிந்து கொள்ளவேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டுக்கமைய அரச சேவையில் சுமைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையே ஆளும்தரப்பு முன்னெடுத்துள்ளது.

தபால் மூல வாக்களிப்பின்போது அரச உத்தியோகத்தர்கள் இது குறித்துச் சிந்திக்க வேண்டும். இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்த பின்னர் ஒரு முதலீட்டாளரேனும் நாட்டுக்கு வந்துள்ளாரா? 6 மாதங்களில் கிடைத்துள்ள முதலீட்டு தொகையைக் கூற முடியுமா?

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு வழங்க முன்னரே, ஏப்ரல் 21 அந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை வெளிப்படுத்துவோம் என ஜனாதிபதி குறிப்பிட்டமை பொய்யல்லவா? இத்தகைய பொய்களுக்கு ஒரு முடிவு வேண்டும். பாதிக்கப்பட்டோருக்கு நியாயம் வழங்கப்படவேண்டும் - என்றார்.

## எதற்கு ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பலரிடம் வாக்குமூலங்கள் பெறப்படுகின்றன. அவை தொடர்பில் எதிர்க்கட்சியினர் கலவரமடையத் தேவையில்லை.

கடந்த ஐந்தரை ஆண்டுகளில் இந்த விசாரணைகளை முறையாக முன்னெடுத்திருந்தால் தற்போது பிரதான சூத்திரதாரியை இனங்கண்டு கைது செய்திருக்கவும் முடியும். ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக விசாரணைகளை முடக்குவதற்கான முயற்சிகளே முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

சில விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமலிருப்பதற்கு கடந்த ஆளும்தரப்பின் அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டனர். சிலர் நாட்டை விட்டுச் செல்லவேண்டிய நிலமைக்குத் தள்ளப்பட்டனர். பெரும்பாலான சாட்சிகள் மறைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான பின்னணியில் கடந்த 6 மாதங்கள் மாத்திரமே விசாரணைகள் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் எதிர்க்கட்சியினர் எதற்காக கலவரமடைகின்றனர். பதற்றமடைகின்றனர என்பதை மக்களால் புரிந்து கொள்ள முடியும்.

அண்மையில் கைதுசெய்யப்பட்டவர்களிடம் குற்றப்புலனாய்வுபிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவை தொடர்பில் பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவினரால் உரிய நேரத்தில் அறிவிக்கப்படும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய விசாரணைகள் மிகவும் சிக்கலானவையாகும்.

கர்தினால் உட்பட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்கள் திருப்தியடையக் கூடியவாறு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சூத்திரதாரி யார்? அவர் ஒருவரா பலரா? அது குறித்து எப்போது அறிவிப்பது என்ற பொறுப்புக்களை குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைப்போம். விசாரணைகள் முறையாக முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் அதற்கான கால வரையறையை எம்மால் தற்போது கூற முடியாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்தில் எவ்வித தவறும் இல்லை. அவரால் கூறப்பட்டதைப்போன்று தற்போது ஒவ்வொரு காரணிகளாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

விசாரணைகளின் அடிப்படையிலேயே அனைத்தும் தீர்மானிக்கப்படுகின்றன. விசாரணைகளுக்கு தேவையான உதவி, ஒத்துழைப்புக்களை மாத்திரமே ஆளும்தரப்பு வழங்கி வருகிறது. அதில் மாத்திரமே ஆளும்தரப்பின் தலையீடு காணப்படுகிறது - என்றார்.

## மாத்தறை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரப்பட்டுள்ளதாக சிறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் மேலும் அமைதியின்மையைத் தடுப்பதற்கும் சிறப்பு அதிரடிப்படை (STF) மற்றும் காவல்துறையினர் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

## பாப்பரசரின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்து ரோம் சாண்டா மரியா மாகியோர் பசிலிக்காவில் அடக்கம் செய்யப்படும்.

போப் பிரான்சிஸின் உடல் புதன்கிழமை காலை 9 மணிக்கு (ஜிஎம்டி 07:00) புனித பீட்டர்ஸ் பசிலிக்காவிற்கு எடுத்துச் செல்லப்படும் என்று வத்திக்கான் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

12 ஆண்டுகால பாப்பரசரின் பூதவுடல் தற்போது அவர் வாழ்ந்த சாண்டா மார்ட்டா இல்லத்தின் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

தனது பணிவான பாணியால் விசுவாசிகளை கவர்ந்த முதல் லத்தீன் அமெரிக்க பாப்பரசர் பிரான்சிஸுக்கு இரங்கல் தெரிவிக்க வத்திக்கானில் உள்ள புனித பீட்டர் சதுக்கத்தில் மக்கள் பெருமளவில் கூடிவருகின்றனர்.

## பெரமுனவின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேகநபரான முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், இறந்தவரால் கத்தியால் குத்தப்பட்டு, நீர்கொழும்பு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார் என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இறந்தவர் பல்வேறு குற்றங்களோடு தொடர்புடையவர். கட்டான கட்டான பகுதியில் பிரதேச சபை வேட்பாளருடன் ஏற்பட்ட வாக்குவாதத்திற்குப் பிறகு, அவரைத் துரத்திச் சென்று பல முறை குத்தினார் என்றும் அதனால் ஆத்திரமடைந்த சந்தேகநபர் பதிலுக்கு தனது அனுமதிபெற்ற துப்பாக்கியால் அவரைச் சுட்டுக்கொன்றார் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இறந்தவரின் நெற்றி, மார்பு மற்றும் வயிற்றில் துப்பாக்கிக்குண்டுகள் பாய்ந்துள்ளன. காயமடைந்த வேட்பாளரின் உடலில் பல கத்திக்குத்து காயங்கள் ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## ஹெகலிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்து முன்னாள் அமைச்சர் ஹெகலியவும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

கெஹெலிய ரம்புக்வெல்ல சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில், அந்த தரமற்ற மருந்தை இறக்குமதி செய்வதன் மூலம் ரூ. 130 மில்லியன் நிதி மோசடி நடந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்வது தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்வதற்காக கெஹெலிய ரம்புக்வெல்ல ஏப்ரல் 9 குற்றப் புலனாய்வுத் திணைக்கத்திற்கு வந்திருந்தார். பல மணி நேரம் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

## பிள்ளையான்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிள்ளையான் மீது கிழக்கு பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் கடத்தப்பட்டமைக்கு எதிரான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்பதையே பெரும்பாலானோர் அறிந்திருக்கின்றனர். ஆனால், அவருக்கு எதிராக மேலும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருகின்றன. அவை தொடர்பான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தற்போது மேலும் பல சாட்சியங்கள் கிடைக்கப் பெறுகின்றன.

தடுப்புக்காவலில் வைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்படும்போது கிடைக்கப்பெறும் தகவல்களில் பெரும்பாலானவை ஒன்றோடொன்று தொடர்புபட்டவையாகக் காணப்படுகின்றன.

விசாரணை அதிகாரிகள், பாதுகாப்பு பிரிவுகள் மற்றும் பல்கலைக்கழகமானிடவியல் துறையின் உதவியுடன் இந்த வழக்கு விரிவாக விசாரிக்கப்படுகின்றது, இது சாதாரணமான ஒருவர் காணாமற்போகச் செய்யப்பட்ட வழக்கு அல்ல - என்றார்.

இதேவேளை, பிள்ளையான் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்று அவரது தரப்பினர் தெரிவிக்கின்றனர். அவரது சட்ட உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

அண்மையில் தன்னை அவரது சட்டத்தரணி என்று அறிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில பிள்ளையானை தடுப்புக் காவலில் இருக்கும்போதே நேரடியாகச் சந்தித்து பேசியிருந்தார். அதன் பின்னர் புலிகளைத் தோற்கடிக்க உதவிய பிள்ளையான் ஒரு தேசப்பற்றாளர் என்று கருத்துத் தெரிவித்திருந்தார்.

## மக்கள்...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் சமூகஊடகபதிவில் இதனை தெரிவித்திருந்தார்

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# தரம் 1 மற்றும் தரம் 5 என்பவற்றுக்கு 2026 இல் புதிய கல்விச் சீர்திருத்தம்

## ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கவும் நடவடிக்கை என்கிறார் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய

2026 இல் தரம் 1 மற்றும் தரம் 5 ஆகியவற்றில் புதிய கல்வி சீர்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளதாக பிரதமரும், கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

வவுனியாவிற்கு விஜயம் செய்த அவர் உக்கிளாங்குளம் சீர்திருத்தம் விளையாட்டு கழக மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

வடக்கில் நான் சென்ற இடமெல்லாம் மக்கள் தமது அன்பையும் ஆதரவையும் வழங்கினர். உண்மையில் இந்த பயணம் எனது குடும்பத்தாருடன் கூடி மகிழந்தது போல இருப்பதை உணர்கின்றேன்.

நாட்டின் பொருளாதரத்தை கிராம மட்டத்தில் இருந்து அபிவிருத்தி செய்ய வேண்டும். நாட்டையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். எங்கள் பிள்ளைகளின் கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

கிராமங்களில் உள்ள சிறிய வீதிகள் திருத்தப்பட வேண்டியிருக்கிறது. இந்த வவுனியா மாவட்டம் பெரிய நகரமாக உள்ளது. அதன் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்ய வேண்டும்.

எதிர்காலத்தில் உல்லாச பிரயாணிகளை இங்கு வரவழைக்க வேண்டிய முறைமையை நாம் உருவாக்குவோம். எனவே, அரசாங்கத்திற்கு பொருத்தமான எங்களுடன் இணைந்து செயற்படக்கூடிய சபைகளை மக்கள் உருவாக்க வேண்டும். அதன் மூலமே கிராமங்களுக்கும் விரைவான அபிவிருத்தியை கொண்டு வரமுடியும்.

கடந்த காலங்களில் தோல்வியடைந்த அரசியல்வாதிகள் தற்போது பயந்து நடுங்கி கொண்டிருக்கின்றனர். வழமையாக தாங்கள் கைக்கொண்டது போல மீண்டும் இனவாதத்தை கைகளில் எடுத்துள்ளனர். மக்களிடையே குரோதங்களையும், பிரிவினைகளையும் ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். எங்களோடு மக்கள் இணைந்திருப்பது அவர்களுக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

நாங்கள் அவர்களிடம் கேட்கிறோம் பழைய அரசியல் கலாசாரத்தை கைவிட்டு மக்கள் விரும்புகின்ற அரசியல் கலாசாரத்திற்குள் நுழைந்து எங்களுடன் இணைந்து பயணிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம். கடந்தகால நிலைப்பாடுகள் மாறிவிட்டது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இனவாதத்தை மீண்டும் உருவாக்க நாங்கள் இடமளிக்கப் போவதில்லை.

அன்பையும் அரவணைப்பையும் கொண்ட ஒரு நாட்டை உருவாக்குவதே எமது தேவையாக உள்ளது. அது இலகுவான ஒரு விடயமல்ல. காலம் காலமாக பிரிவினையை ஏற்ப்படுத்தி வந்த வடுக்களை போக்குவது கடினமான விடயமே.

ஒவ்வொருவருக்கிடையிலும் இழந்து போன நம்பிக்கையை ஏற்படுத்துவது இலகுவானதல்ல. ஆனால் நாம் நல்ல ஓர் அரசியலை செய்வதற்கான நம்பிக்கையை கொண்டுள்ளோம். உங்கள் பிரச்சினைகளை கேட்பதற்கும் உங்களிடம் இருந்து கற்றுக் கொள்வதற்கும் நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம். உங்கள் அனுபவங்களை புரிந்து கொண்டு எங்களை மாற்றி பயணிக்க நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம். அதன் மூலம் நல்ல ஒற்றுமையான ஐக்கியமான நாட்டை எதிர்கால சந்ததிக்கு கையளிக்க வேண்டும்.

எங்களுக்கு செய்வதற்கு பல வேலைத் திட்டங்கள் இருக்கின்றன. இந்த வன்னி பிரதேசத்திற்கு கல்வி எவளவு முக்கியத்துவமானது என்பதை நான் புரிந்து கொண்டுள்ளேன். அரசு என்ற வகையில் நாம் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குகின்றோம். வடபகுதி மக்கள் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குபவர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் வடமாகாணத்தின் கல்வி இன்று பாதிப்படைந்து கீழ் நிலையில் உள்ளது. ஆசிரியர் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை என்பனநாடுமுழுவதும்இருந்தாலும் வடக்கில் கூடுதலாக உள்ளது.



சிறுவர்கள் பாடசாலை கல்வியில் அலட்சியமான போக்கை கடைப்பிடிக்கின்றமை வேதனையான விடயமாக உள்ளது. போதைப் பொருள் பாவனை வியாபித்துள்ளது. இதில் மிகுந்த கவனத்தை நாம் செலுத்த வேண்டும்.

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டில் நாம் புதிய கல்வி சீர்திருத்தம் ஒன்றை ஆரம்பிக்க இருக்கின்றோம். தரம் 1 மற்றும் தரம் 5 என்பவற்றில் அந்த மாற்றங்களை கொண்டு வரவுள்ளோம். மே மாதத்தில் இருந்து அந்த மாற்றங்கள் தொடர்பில் அதிபர் ஆசிரியர்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளோம். ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்க எதிர்பார்த்துள்ளோம். கல்வியியல் கல்லூரிகளை விருத்தி செய்து அதில் உள்ள குறைபாடுகளை தீர்ப்பதற்கு நிதி ஒதுக்கியுள்ளோம்.

ஆசிரியர் பற்றாக்குறையை தற்காலிகமாக நிவர்த்தி செய்வதற்கு தொழில்நுட்ப ரீதியான விடயங்களை உள்ளடக்க எதிர்பார்த்துள்ளோம். இதற்காக உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் கேட்டு நிற்கின்றோம்.

மக்கள் எதிர்பார்க்கின்ற சமாதானத்தையும் ஒற்றுமையுடனும் அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அபிவிருத்தி அடைந்த ஒரு நாட்டைக் கையளிப்பதற்கு நாங்கள் அனைவரும் தயாராக வேண்டும். அதற்கு ஊழலற்ற சபைகளை உருவாக்க வேண்டும். ஊழல் நிறைந்த சபைகளுக்கு நிதிகளை ஒதுக்குவது கடிணமான விடயம். இதனை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். மத்தியில் இருக்கும் அரசாங்கம் உள்ளூராட்சி சபை அதிகாரங்களையும் கொண்டிருக்கும் போது அபிவிருத்தியை இலகுவாகக் கொண்டு செல்லலாம். நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அதற்கு இன மத பேதமற்ற தேசிய மக்கள் சக்தியின் கரங்களை பலப்படுத்துங்கள். - என்றார். 100

## கடந்த கால ஆட்சியாளர்களால் நிராகரிக்கப்பட்ட திட்டங்களை மீளத் தொடர்வது பொருத்தமற்றது

### சண்முகம் குகதாசன் எம்.பி. சுட்டிக்காட்டு



(ஹஸ்பர்)

கடந்த காலங்களில் நிராகரிக்கப்பட்ட திட்டங்களை நகர அபிவிருத்தி என்ற போர்வையில் அதே இடத்தில் திருகோணமலை நகர் பகுதியில் முன்னெடுப்பது பொருத்தமற்றது என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார் .

தொடர்ந்தும் தெரிவித்த அவர் -

திருகோணமலை நகர அபிவிருத்தி திட்டம் தொடர்பில் பல விடயங்களை மேற்கொள்ளவுள்ள நிலையில் இவ்வாறான திட்டமிடப்படாத அபிவிருத்தி கோணேசர் கோவில் பகுதி உட்பட கரையோர பகுதிகளுக்கும் பாதக விளைவுகளை ஏற்படுத்தும்.

குறித்த இந்த பத்தாண்டு திட்டமானது இதில் மூன்று விடயங்கள் பாதகமானது. கோட்டாபய காலத்தில் குறித்த பகுதியில் திட்டம் ஒன்றை முன்வைத்தார். அது நகர அபிவிருத்தி அதிகார சபையால் நிராகரிக்கப்பட்டது. ஏன் எனில் அந்த பகுதி தொல்பொருள் பகுதி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை பகுதி என்பதால் வீடமைப்பு திட்டம் சாத்தியமாகாது என்றும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இதன் போது மேலும் தெரிவித்தார்.

## கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையில் கண்காணிப்புக் கள ஆய்வில் ஈடுபட்ட ஆளுநர்

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகரவுடன் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கோமரங்கடவல பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமாகிய ரொஷான் அக்மீமனவும் திஙுீங்கட்கிழமை திருகோணமலை மாவட்ட கோமரங்கடவல பிராந்திய மருத்துவமனை மற்றும் பிரதேச





சபைக்கு ஒரு குறுகிய கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டனர்.

கோமரங்கடவல பிராந்திய மருத்துவமனையில் உள்ள பிரச்சினைகள் ஆராயப்பட்டு அந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க குறித்த பிரதேசத்தில் உள்ள அரசநிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தேவையான நடவடிக்கைகளும் இதன் போது எடுக்கப்பட்டன.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சட்டநெறியின் சோதனை

வைகாசி 6 நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல், நாட்டின் ஜனநாயக வரலாற்றில் மிக முக்கியமான கட்டத்தினைக் குறிக்கக்கூடியது. இருப்பினும், இந்தத் தேர்தல் ஒரு சட்டசிக்கலின் நடுவே நிரந்தரமாக சிக்கிக்கொண்டு இருப்பது போன்று தோன்றுகிறது. ஏனெனில், உயர் நீதிமன்றமும் (Supreme Court), மேன்முறையீட்டு நீதிமன்றமும் (Court of Appeal), ஒரே விடயத்தில் முறையே முற்றிலும் மாறுபட்ட உத்தரவுகளை வழங்கியுள்ளன. அந்த முரண்பாட்டைத் தீர்க்காமல் அல்லது தெளிவைப் பெறாமல் தேர்தலை நடத்தி ஒப்பேற்றினால் போதும் என்கிற வகையில் தேர்தல் ஆணைக்குழுவும் ஆளும்தரப்பும் செயற்படுவது விசனத்திற்குரியது.

இந்த இருவகை தீர்ப்புகளின் முரணான நிலைமை, அரசமைப்பு சட்டத்தின் அடிப்படையான சித்தாந்தங்களை — குறிப்பாக, சட்டத்தின் ஒருமுகப்பும், நீதியின் நிலைத்தன்மையும் — கேள்விக்குள்ளாக்கும் அளவுக்கு ஆபத்தானதாகும். இது மட்டும் இல்லாமல், இரண்டு உயர் நிலை நீதிமன்றங்களின் விசாரணைத் தீர்மானங்கள் முற்றிலும் மாறுபடுவதைத் தீர்ப்பதற்கான எந்த முயற்சிகளும் எடுக்கப்படாத காரணத்தால் இந்த தேர்தல் ஒரு மாபெரும் சட்டவிவாதத்திற்கான அடிப்படையாக எதிர்காலத்தில் மாறலாம்.

இந்த சட்டக் குழப்பத்துக்கிடையில், தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்ட முடிவு — அதாவது, இந்த விவகாரம் தீர்வுக்கு வராமலேயே தேர்தலை நடத்தும் முடிவு — தீவிர விமர்சனத்துக்குரியது. ஏனெனில், இது எதிர்காலத்தில் அந்த தேர்தலில் வெற்றிபெறும் உறுப்பினர்களின் சட்டப்பூர்வத் தகுதியையே கேள்விக்குள்ளாக்கும் நிலைமையையும் ஏற்படுத்தக்கூடியது.

இதற்கு மாற்றாக, தேர்தல் ஆணைக்குழு, சட்ட நிலைமை தெளிவாகும் வரை தேர்தலை ஒத்திவைப்பது மட்டுமே அதன் முன்பாக இருந்த தெரிவாகும். ஆனால், அத்தகைய ஒரு முடிவுக்கு ஆளும்தரப்பின் ஆதரவு இருக்கவில்லை என்பது தெளிவாகவே தெரிகிறது. இதனால் இப்போது குழப்பகரமானா ஒரு சூழலிலேயே தேர்தல் இடம்பெறப்போகின்றது.

இதேவேளை, நாட்டின் நாடாளுமன்றமும், நீதிமன்றத் துறையும், தேர்தல் ஆணைக்குழுவும் ஒன்றாக இணைந்து, பொதுமக்களின் நம்பிக்கையை நிலைநாட்டும் வகையில் ஒரு தெளிவான தீர்வை விரைவில் ஏற்படுத்த வேண்டும். இல்லையெனில், உள்ளூராட்சித் தேர்தல் ஒரு சட்டவாதத் திகைப்பாய் மட்டுமே மாறிவிடும் அபாயம் மிக அதிகமாகவே உள்ளது.

# தலவாக்கலை ஊடகருக்கு கலாஜோதி விபூஷண் விருது



தலவாக்கலையைச் சேர்ந்த பழனியாண்டி திருக்கேதீஸ்வரன் அவர்களுக்கு சிறந்த ஊடகவியலாளர் விருதும் கலாஜோதி விபூஷண் விருதும் வழங்கப்பட்டுள்ளது.

ஹற்றன் தினகரன் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் ஹற்றனில் சனிக்கிழமை நடைபெற்ற கலைகளின் சங்கம விழாவின்போதே, கலாஜோதி விபூஷண் விருது வழங்கி பழனியாண்டி திருக்கேதீஸ்வரன் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் இவருக்கு இவ்விருதினை வழங்கி வைத்தார்.

பழனியாண்டி திருக்கேதீஸ்வரன் தமிழ் மற்றும் ஆங்கில பத்திரிகைகளில் தலவாக்கலை பிரதேச பிராந்திய செய்தியாளராக கடமையாற்றி வருகின்றார்.

14 ஆண்டுகளுக்கு மேலாக ஊடகத்துறையில் மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு வெளிக்கொணர்ந்துள்ளார். மேலும் மாத்யபந்து, மாத்ய பிரதீபா, மத்திய மாகாண சாகித்திய விருது போன்ற பல்வேறு விருதுகளை இவர் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 10 பேர்ச்சஸ் காணியை உடன் வழங்கவேண்டும்

## திகாம்பரம் எம்.பி. கோரிக்கை

(கிஷாந்தன்)

'மலையக தமிழ் மக்கள்மீது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு உண்மையில் அக்கறை இருந்தால் 10 பேர்ச்சஸ் காணியை உடன் வழங்க வேண்டும்.' - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

ஹற்றனில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

அனைத்து உள்ளூராட்சிசபைகளையும் கைப்பற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. ஆனால் எதிரணியில் இருந்தபோது தாம் செய்வதாகக் கூறிய விடயங்களை ஆட்சிக்கு வந்த பிறகு தேசிய மக்கள் சக்தி செய்யவில்லை. வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.



மலையகத் தமிழர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள்மீது இந்த அரசாங்கத்தக்கு உண்மையாகவே கரிசணை இருக்குமானால் உடனடியாக 10 பேர்ச்சஸ் காணியை வழங்க வேண்டும். அதனை வழங்குவதற்கு ஆட்சியாளர்கள் தயாரில்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா வழங்கப்படும் என 6 மாதங்களாக கூறிவருகின்றனர். ஆனால் எதுவும் நடப்பதாக தெரியவில்லை. ஆனாலும் மலையக மக்களுக்காக அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவோம். - என்றார்.

# கல்முனை இஸ்லாமாபாத் மகா வித்தி. பாடசாலை கவின் கலைப் போட்டிகள்

(நூருல் ஹுதா உமர்)

ஆசிரியர்கள், மாணவர்களின் கற்பித்தல், கற்றல் செயற்பாடுகளில் உளரீதியான மனப்பாங்குகளை மாற்றமடையச் செய்யும் நோக்குடன் வருடா வருடம் நடத்தப்படும் வகுப்பறைக் கவின்நிலை போட்டி கல்முனை இஸ்லாமாபாத் மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை கல்வி வலயத்தின் ஆரம்ப பிரிவு கவின் கலை போட்டி விதிமுறைகளுக்கு அமைவாக தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெற்ற இப்போட்டியில் பாடசாலையின் ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் ஐ.எல்.அப்துல் ரஹ்மான், ஆரம்பப் பிரிவு வளவாளர் எம்.எம்.ஏ.ஹபீழ் ஆகியோர் பார்வையிட்டு மதிப்பீடுகளில் ஈடுபட்டனர்.



மேலும் பாடசாலையின் கவின்கலை போட்டி இணைப்பாளர்களான ஆசிரியர் எம்.சீ.ஹிஜாஸ், ஆசிரியர் ஏ.ஆர். பைறூஸ் கான் ஆகியோரின் நெறிப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பிலும் இந்நிகழ்வு நடைபெற்றது.

பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ரீ.ஏ.முனாப் மற்றும் பாடசாலை முகாமைத்துவ குழுவின் சிரேஷ்ட ஆசிரியர் முஜிப்டீன் ஆகியோர் இணைந்து இந் நிகழ்வை ஆரம்பித்து வைத்தது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# பிரதேச மக்களுக்கு உதவுவதற்காக வவுணதீவில் உதவு ஊக்க மையம்

பிரதேச மக்களுக்கு உதவும் வகையில், வவுணதீவுப் பிரதேசத்தில் உதவு ஊக்கமையம் திறந்துவைக்கப்பட்டுள்ளதாக சேர்க்கிள் எனப்படும் இளம்பெண்கள் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் அஜானிகாசிநாதர் தெரிவித்தார்.

வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வவுணதீவு, கல்குடா நரிப்புல்தோட்டம் மகிழவெட்டுவான் ஆகிய கிராமங்களில் பாதிக்கப்பட்ட பெண்கள், இளைஞர்கள், யுவதிகளை உள்ளடக்கி அப்பிரதேச பரிந்துரை வலையமைப்பின் ஊடாக ஆரம்பித்து வைக்கப்பட்டகணனிப் பயிற்சி, காகிதாதிகள் விற்பனை, போட்டோ கொப்பி, பிரின்ரிங் உட்பட உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் விற்பனை நிலையம் திங்கட்கிழமை திறந்துவைத்து பயனாளிகளிடம்கையளிக்கும் நிகழ்வுஇடம்பெற்றுள்ளது.

இங்கு 'பொன்'நிறுவனத்தின் நிதிஅனுசரணையில் சேர்க்கிள்நிறுவனத்தின் அமுலாக்கத்தில்சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணத் தொகுதிகள் பிரதேச பரிந்துரைப்புக்குழுவிடம் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில்உரையாற்றியசேர்க்கிள்இளம்பெண்கள் அமைப்பின்அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் அஜானி, சேர்க்கிள் அமைப்பினால்மாவட்டத்திலுள்ள ஏறாவூர்ப்பற்று, கோறளைப்பற்றுமத்தி வாழைச்சேனை, வவுணதீவு ஆகியமூன்று பிரதேசசெயலாளர் பிரிவுகளில்இளைஞர், யுவதிகள், பெண்கள் ஆகியோரிடையேநிலவும் தொழிலில்லாப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இத்தகைய வாழ்வாதாரத்திற்கான தொழிலூக்க உதவிகள்வழங்கப்பட்டு வருகின்றன.

நாம் தொடர்ந்துமுயற்சியைக் கைவிடாமல் இந்தப் பிரதேசமக்களுக்கான உதவிகளை மக்களின் காலடிக்குக்கொண்டு வந்துசேர்ப்பிப்பதில் உறுதியாக இருந்தோம். அதுஇப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எனவே இவற்றைப்பாதுகாத்துஇத்திட்டத்தை முன்கொண்டுசெல்ல வேண்டியது பிரதேச மக்களின்பொறுப்பாகும். இதன் நோக்கம் பரிந்துரை வலையமைப்புதொடர்ந்து இயங்கி அதனூடாகபெண்கள்,இளைஞர், யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினைதீர்க்கப்பட வேண்டும், பிரதேச மக்களின்பொருளாதாரம்வளமடைய வேண்டும், வாழ்வாதாரம் சிறப்படையவேண்டும்என்பதே யாகும். 'என்றார். நிகழ்வில் மகிழவெட்டுவான்கந்தப்போடி வித்தியாலயத்தின்அதிபர் வி.ஏரம்பமூர்த்தி, நரிப்புல்தோட்டம்நடேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபர் வி.மாதவன், சேர்க்கிள்நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட ஏறாவூர்ப்பற்று,கோறளைப்பற்று மத்திவாழைச்சேனை, வவுணதீவுஆகிய பிரதேசங்களிலுள்ள பரிந்துரை வலையமைப்பின்உறுப்பினர்கள், சேர்க்கிள் இளம்பெண்கள் அமைப்பின் வெளிக்கள இணைப்பாளர்களான கே.ஜெயவாணி,எம்.எல்.மாஜிதா, கே.லக்ஷானா ஆகியோருட்பட பரிந்துரைவலையமைப்பிலுள்ள பயனாளிகளும் கலந்து கொண்டனர்.







காலைக்கதிர் Kalaikkathir

# ஒப்பற்ற தார்மீக மரபை மறைந்த பாப்பரசர் விட்டுச் சென்றுள்ளார்

## மு. கா. தலைவர் ரவூப் ஹக்கீம் அனுதாபம்



தற்காலத்தில்உலகளாவியரீதியில் பெரிதும் செல்வாக்குமிக்கவராக மதிக்கப்பட்ட பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஒப்பற்றதொரு தார்மீக மரபை விட்டுச் சென்றுள்ளார் எனவும், அன்னாரின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைவதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

மறைந்த பாப்பரசர், இவ்வுலகில் வாழும் ஒரு பில்லியனுக்கும் அதிகமான கத்தோலிக்கர்களைக் கவர்ந்து ஈர்த்த ஆளுமை மிக்க ஆன்மீகத் தலைவராகத் திகழ்ந்தார்.நீண்ட வரலாற்றைக்கொண்ட பாரம்பரியத்தில், ஐரோப்பியரல்லாத , லத்தீன் அமெரிக்கர் ஒருவரான அவரது பயணப் பாதையில் அடிமட்ட சமூகத்தவர்களுடன் அவர் பேணிவந்த அன்புத் தொடர்பு, வறுமை பற்றி அவருக்கு இருந்த ஆழமான புரிதல் மற்றும் இளமை தொட்டே அன்னார் கடைப்பிடித்தொழுகிய தன்னலமற்ற வாழ்க்கை நெறி ஆகியவற்றால் நன்கு புடம் போடப்பட்டிருந்தார். பாவத்தில் உழன்ற மக்களைப் பற்றி அவர் பச்சாதாபப்பட்டார்.

பலஸ்தீனத்தில் காசாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள பேரழிவு

மற்றும் காலநிலை மாற்றத்தால் நிகழ்ந்து வரும் நெருக்கடி நிலைமைகள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி அவர் கரிசனை கொண்டிருந்தது மட்டுமல்ல, மறைவதற்கு முந்திய நாள் உயிர்த்த ஞாயிறன்றுகூட, காசாவிலும் உலகெங்கிலும் அமைதிக்காக அழைப்பு விடுத்திருந்தார்.

முன்னதாக, காசாவில் இஸ்ரேலின் இராணுவக்கெடுபிடிகளின்படுமோசமான விளைவுகளை 'இனப்படுகொலை' என அவர் கண்டித்திருந்தார். அந்த பரிதாப நிலைமையின் தீவிரத் தன்மையை அவர் சுட்டிக்காட்டி, குறிப்பாக அப்பாவி பச்சிளம் பாலகர்கள் மீது மேற்கொள்ளப்படும் குண்டுவீச்சுத் தாக்குதல்களை ஈவிரக்கமற்ற படுபாதகச் செயல்கள் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

பாலஸ்தீன மக்கள் அனுபவிக்கும் துன்ப , துயரங்கள் மீது பலம் வாய்ந்த நாடுகள் கடைப்பிடிக்கும் அலட்சியப் போக்கையிட்டு அன்னார் கவலைடைந்திருந்தார். குண்டுவெடிப்புகளால் பல்வேறு விதங்களிலும் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி விசாரித்தறிவதற்கு அவர் கடந்த சில மாதங்களாக அடிக்கடி காசாவில் உள்ளவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தாகவும்கூறப்படுகின்றது.

அவரது மனிதாபிமான பார்வை கத்தோலிக்கர்கள் மீதும் கத்தோலிக்கர் அல்லாதவர்கள் மீதும் ஒரு சேர படர்ந்திருந்தது.

மோதல்கள்உக்கிரமடைந்துள்ள மக்கள் வறுமையால் வாடுகின்ற பல ஆசிய ,ஆபிரிக்க ,ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அவர் நிலைமைகளை நேரில் அவதானித்திருந்தார் .

சிறிது காலம் நோய் வாய்ப்பட்டிருந்த நிலையில்,இவ்வுலகைவிட்டுப் பிரிந்துள்ள பரிசுத்த பாப்பரசர் அவர்களின் மறைவுத் துயரில் நாங்களும் பங்கேற்கின்றோம். - என்றுள்ளது.

# மறைந்த பாபரசருக்கு மட்டக்களப்பில் அஞ்சலி

(சக்திவேல்)

மட்டக்களப்பில் மறைந்த வணக்கத்துக்குரிய பாபரசர் பிரான்சிஸ் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் நித்திய இளைப்பாற்றை அடுத்து மட்டக்களப்பில் உள்ள கிறிஸ்தவ தேவ ஆலயங்களில் அன்னாரது மறைவைக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் வகையில் மட்டக்களப்பு ஆயர் இல்லம் மற்றும் புனித ஜோசப் வாஸ்சபை புளியந்தீவு புனித மரியாள் பேராலய பங்கு தந்தை பங்கு மக்களால் அனுதாப பதாகைகளும் வெள்ளை கொடிகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மரியாள் தேவாலய கொடிகளும் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளன.







# இந்த யுகத்தின் அடையாளமாக விளங்கிய பரிசுத்த பாப்பரசரின் மறைவுக்கு இரங்கல்

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

இந்த யுகத்தின் அடையாளமாக விளங்கிய பரிசுத்த பாப்பரசரின் மறைவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அனுப்பி வைத்துள்ள இரங்கல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கத்தோலிக்கத் திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அடிகளாரின் மறைவு, உலக வாழ் மக்கள் ஒவ்வொருவரையும் ஆழ்ந்த கவலைக்குள் தள்ளியுள்ளது.

உலக வாழ் கத்தோலிக்க மக்களின் திருத்தந்தை என்ற அடையாளத்தைப் பெற்றிருந்த அவர், தனது திருச்சபை மக்களைக் கடந்து உலக வாழ் மக்கள் தொடர்பில் சிரத்தையும், மானிட நேசத்தையும் கொண்டிருந்தார்.

கருணையையும், மனித நேயத்தையும், சமாதானத்தையும் விரும்பிய இந்த யுகத்தின் அடையாளமாக திகழ்ந்த திருதந்தை எல்லா மக்களாலும் போற்றப்பட்டவராவார்.

உலகத் தலைவர்கள் சுற்றுச் சூழலையும், குழந்தைகளையும், முதியோர்களையும், துன்பத்தில் உழல்வோரையும் பாதுகாக்கக் கடமை கொண்டுள்ளார்கள் என்ற தூய சிந்தனையோடும் மனித நேயத்துடனும், பக்குவத்துடனும் செயலாற்றினார்.

மதங்களைக் கடந்த மனித நேயத்தின் அடையாளமாக, சமாதானத்தின் தூதுவனாக இறைபணி ஆற்றிய கத்தோலிக்க திருச்சபையின் திருத்தந்தை பிரான்சிஸ் அடிகளாரின் மறைவிற்கு எனது மாவட்ட மக்கள் சார்பாகவும், எமது அரசாங்கம் சார்பாகவும், என் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கின்றேன் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 100






காலைக்கதிர் Kalaikkathir

# மே முதலாம் திகதி மக்களை திரட்டி எமது பலத்தைக் காட்ட வேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

(கிஷாந்தன்)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவும், இ.தொ.காவினரும் கூறிய விடயத்தைதான் ஜனாதிபதியும் தலவாக்கலைக்கு வந்து தற்போது கூறியுள்ளார் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

'ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தே இம்முறை தலவாக்கலையில் மே தினக் கூட்டம் மற்றும் பேரணியை நடத்தவுள்ளோம்.

ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றது. உள்ளூராட்சிசபைகளையும் கைப்பற்றுவதற்கு தற்போது முழு வீச்சுடன் செயற்படுகின்றது.

ஜனாதிபதி தலவாக்கலைக்கு வருகை தந்திருந்தார். மலையக மக்களுக்கான 10 பேர்ச்சஸ் காணி உரிமை பற்றி எதுவும் பேசவில்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பள உயர்வு வழங்குவது தொடர்பில் கம்பனிகளுடன் பேச்சு நடத்தப்படும் எனக் கூறியுள்ளார். கடந்த மே தினத்தன்று ரணில் விக்கிரமசிங்கவும், இதொகாவினரும் தலவாக்கலையில் வைத்து விடுத்த அறிவிப்பைதான், ஜனாதிபதியும் தலவாக்கலைக்கு வந்து கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

மீண்டும், மீண்டும் பொய்யுரைப்பதால், பொய் உண்மையாகப்போவதில்லை. எனவே, கம்பனிகளுடன் பேச்சு நடத்துங்கள். இணக்கப்பாட்டை ஏற்படுத்திய பின்னர் மக்களுக்கு உறுதிமொழியை வழங்குங்கள்.

நாட்டில் தற்போது பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. இது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அதற்கேற்ற வகையில் எமது உறுப்பினர்கள் பிரச்சாரம் செய்ய வேண்டும்.




மே முதலாம் திகதி நாம் பெருமளவு மக்களை திரட்டி எமது பலத்தைக் காட்ட வேண்டும். - என்றார்.

## பரீட்சைக்கான திகதிகள் அறிவிப்பு

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற 2025 ஆம் ஆண்டிற்குரிய இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் 16,17,18 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அகிலஇலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகள் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயம் மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளீர் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு வரலாறு ,17 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 9 மணிக்கு சாத்திரம் பி.ப 2 மணிக்கு உரைநடை , 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு இலக்கியம் பி.ப 2 மணிக்கு இலக்கணம் ஆகிய பாடங்களுக்குரிய பரீட்சைகள் நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் வைகாசி முதல்வாரத்தில்தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



• CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
• NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
• வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
• ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
• GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY


46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# நாமார்க்கும் குடியல்லோம் என மொழிந்த நம் தமிழ் அடியார்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் ....... ஆஸ்திரேலியா**

தமிழ்மொழி மற்றைய மொழிகளிலும் சிறப்பான மொழியாக விளங்குவதற்குக் காரணம் , மற்றைய மொழிகளில் இல்லாத ஒரு சிறப்பு தமிழ் மொழியில் இருப்பதேயாகும் என்பது அறிஞர்கள் கருத்தாக இருக்கிறது. அந்தத் தனிச்சிறப்பு எது தெரியுமா அதுதான் ' பக்தி இல க்கியம் ' ஆகும். உலகின் எந்த மொழியிலும் பக்தி என்பது இலக்கியமாகக் கொள்ளப்படவே இல்லை. ஆனால் தமிழ் மட்டும் தனக்கெனப் பக்தியை இலக்கியம் ஆக் கியே இருக்கிறது. இதனால் தமிழ் பக்தியை அரவணைத்தபடியே பயணப்படு கிறது என்பதை கருத்திருத்தல் அவசியமாகும். பக்தியை இலக்கியம் ஆக்கும் வகையில் தமிழுக்கு வந்து வாய்த்தவர்கள்தான் ஆண்டவனது அடியார்கள் ஆவர். அந்த அடியார்களில் முன்னுக்கு வந்து நிற்பவர் களில் மூத்தவர் காரைக்கால் அம்மையார். அவரின் பின் பக்திப் பெருவெளியில் பயணப்பட இம்மாநில த்தில் வந்தவர்களாய் அப்பரும் சம்பந்தரும் விளங்குகிறார் எனலாம். இவர்கள் இருவரும் ஒரே காலத் தவராக இருக்கின்ற பொழுதும் - அப்பர் மூத்தவராகவும் , சம்பந்தர் இவரின் இளையவராகவும் ஆகி நிற்கி றார்கள்.



அப்பரும்சம்பந்தரும்கிபிஏழாம்நூற்றைண்டைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் , இருவர் வாழ்வும், அவர்களுக்குக் கிடைத்த அனுபவங்களும் வேறு பட்டனவாகவே அமைந்திருந்தன என்பதும் நோக்கத் தக்கது,அப்பர் குடும்பச் சூழல் வேறாயும் சம்பந்தர் குடும்பச் சூழல் வேறாயும் அமைந்தே காணப்பட்டது. ஆனால் பக்தி என்னும் நிலையில் இருவரும் ஒருமித்தே பயணப்பட்டார்கள். அப்படிப் பயணப்பட்ட நிலை யிலும் அப்பரின் சிந்தனை, செயற்பாடுகள், சம்பந்திலும் வேறுபட்டதாகவே அமைகின்ற ஒரு நிலை தோற்றம் பெற்றது. அதற்கு உரிய காரணம் தான் என்ன என்பதை அறிவது மிகவும் முக்கியமாகும்.

மருள் நீக்கியார் சைவத்தில் பிறந்து சைவத்தைத்துறந்து சமணம் என்னும் சமயத்தைத் தழுவுகின் றார்.மருள் நீக்கியாரின் இளம் மனத்தில் சமணத்தின் கொள்கைகள் சிறந்தனவாகப்படுகின்றன சமணரும் இவரை அணைக்கின் றனர். சமண மடத்தின் தலைவராய் ஆகும் அளவுக்கு மருள் நீக்கியார் ஆளுமை வளர்கிறது. மருள் நீக்கியார் என்னும் பெயர் மறைந்து சமண மடத்தி ன் தலைவராய் ' தருமசேனர் ' என்னும் புதுப் பெயர் வாய்க்கிறது.நாட்டில் சமணமே அரசபீடத்தாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.மருள் நீக்கியாரின் மனம் மாறுகிறது. சமணத்தின் தலைமையைத் தூக்கி எறிந்துவிட்டு தான் பிறந்த சைவத்தில் அவர் சங்கமம் ஆகிறார். சங்கமம் ஆகும் நிலையில் அவர் நெஞ்சம் தமிழைக் கொட்டுகிறது. அதுவும் கவியாய், பக்தியாய் ,இசையாய் கொட்டுகிறது. எம்பெருமான் சிவனே வியந்து ' நாவுக்கரசு ' என்று விளிக் கும் அளவுக்கு தமிழ் ஆக்கி நிற்கிறது. மருள் நீங்கியதால் அருள் கிடைக்கிடைக்கிறது. தருமசேனர் சைவம் தளைக்க , தொண்டுகள் சிறக்க, நாவுக்கக்கரசாய் வலம் வருகிறார்.வலம் வருகின்ற நாவுக்கரசரை இளையவரான சம்பந்துப் பெருமான் கண்டவுடன் ' அப்பரே ' என்று அழை க்கின்றார். இறைவன் அழைத்த நாவுக்கரசர் என்னும் பெயரும் சம்பந்தப் பெருமான் அழைத்த அப்பரே என்னும் பெயரும் - சைவத் தமிழ் உலகில் நிலையான , உறுதியான பெயராக நிலைத்தே விட்டது என்பது மனங்கொள்ளத்தக்கது.

அப்பர் பெருமான் வரலாற்றை நோக்கும் பொழுது - அவர் சமயத்தின் வழியிலும் பயணப்பட்டிருக்கிறார். சமூகநீதியின் வழியிலும் பயணப்பட்டி ருக்கிறார் என்றுதான் மனங்கொள்ள வைக்கிறது. சம்பந்தப் பெருமானின் சமகாலத்தவராக இருந்த பொழுதும் , அப்பரின் வாழ்வியல் அனுபங்களும் , அவரின் வயதின் முதிர்ச்சியும் அவருக்கென்று தனியான ஒரு இடத்தி னையே வழங்கி இருக்கிறது எனலாம்.

சமணமதத் தலைவராய் இருந்த காரணத்தால் அவரின் புலமை நலம் ஆளுமை உடையதாகவே அமைந்தது, வடமொழியிலும் , தமிழ் மொழியிலும் புலமை உடையவராகவும் இருந்திருக்கிறார். சமண மதத்தாரால் மதிக்கப்படும் நிலையில் அவர் இருந்திருக்கிறார் என்பதும் நோக்கத்தக்கது. அப்படி மதிக்கப் பட்டவர் அந்த மதத்தை விட்டு வெளியில் வருவதும், சைவத்தில் இணைவதும் சம்பந்தருக்குக் கிடைக் காத நிலை எனலாம். மதம் விட்டு விடு மதம்மாறியவர் என்று எடுத்துக் கொண்டால் அதில் அப்பர்தான் முன்னிற்கிறார்.அப்படி அவர் மனம் மாறியமையமையால் சைவம் மிகச்சிறந்த ஒரு அடியவரை, பேராளு மையை, சிந்தனையாள ரைப் பெற்றுக்கொள்ளும் நிலை வாய்த்தது என்பதை கருத்திருத்தல் அவசியமா னதாகும்.ஏழாம் நூற்றாண்டின் சமய சமூக சூழலில் சம்பந்தருடன் அப்பரின் இணைப்பு அளப்பரும் இணைப்பாகவே அமைந்தது. அப்பரும் சம்பந்தரும் அப்பாவும், பிள்ளையும் போல இணைந்து ஆலயங்கள் தோறும் சென்று அடியார்கள் மனத்தில் பக்தியென்னும் விதையினை ஆழமாக விதைத்திட்டார்கள் என்ப தும் நோக்கத்தக்கதாகும்.இளமையும் முதுமையும் இணைந்த நிலை சைவ பக்தியுலகுக்கு பெரும் உந்து சக்தி யாக அமைந்தது என்பதைக் கருத்திருத்தல் வேண்டும்.

அப்பர் மதம்மாறிய நிலையில் , அவரின் கூட இருந்த சமணர்கள் ஆத்திரம் கொண்டு வெகுண்டெழுந் தார்கள். ஏழாம் நூற்றாண்டில் அரசுகட்டிலில் பாண்டியனும் , பல்லவனும் இருந்தார்கள். அவர்களும் சமணத்தைத் தழுவி அதற்கே ஆதரவும் காட்டி நின்றார்கள். சமணம் என்பது அரசமதமாகவே காணப்ப ட்டது எனலாம். வெகுண்ட சமணர்கள் அரசனை நாடி , மதம்மாறிய துரோகத்துக்கு உரிய தண்டனை யினை அப்பருக்கு வழங்கிட வழி வகுத்தனர். அரசனுடைய அழைப்பாணை அப்பரிடம் போனது. அப்பர் மனம் முழுவதும் எம் பெருமான் சிவனின் நினைப்பே நிறைந்திருந்த காரணத்தால் , அரசாணையினை அவர் ஒரு பொருட்டாக எடுக்கவேயில்லை. அரனுக்கு அடியவராய் ஆகி விட்ட காரணத்தால் அரசினையே எதிர்த்து ;

நாமார்க்குங் குடியல்லோம் நமனை
யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ
மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி
னோமே

என்று அஞ்சாமல் ஏழாம் நூற்றாண்டில் எடுத்துரைத்த தமிழ் அடியவராய் அப்பர் பிரகாசித்து நிற்கிறார். அரசனையே எதிர்த்து தனது அஞ்சாமையை உரைத்த அப்பரின் துணிச்சல் ஒரு சமய , சமூகப் புரட்சியாய் அமைகிற தல்லவா ! பிற்காலத்தில் பாரதி ' அச்சமில்லை அச்சமில்லை ' என்று கர்ஜிப்பதற்கும் வழி வகுத்தவர் அப்பர் என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா !

சம்பந்தருக்கு இவ்வாறான சந்தர்பம் வாழ்க்கையில் வாய்க்கவில்லை. அது மட்டு மல்ல அப்பரின் பின் வந்த எந்த அடியவர்களுக்கும் இப்ப டி யான சந்தர்ப்பம் வரவேயில்லை. இதனால் அப்பரினால் மட்டுமே ' நாமார்க்கும் குடியல்லோம் ' என்று சொல்லும் நிலை வாய்த்துவிட்டது. சமயத்தை மாற்றி வந்த நிலை யிலும் அப்பர் உயர்நிலையிலே யாவராலும் பார் க்கப்பட்டார். இதுவும் அப்பரை மற்றவர்களிருந்தும் வேறுபடுத்தியே காட்டி நிற்கிறது.

தமக்குத் தீங்கு வந்தால் யாவருமே நொந்து போவார்கள். வந்த தீங்கினை வைதே நிற்பார்கள். ஆனால் அப்பர் வித்தியாசமானவராக விளங்குகிறார். அவருக்கு சூலை நோய் வந்தது. பெருந்துன்பப் பட்டார். அப் படிப் பெருந் துன்பத்தை தந்த சூலைநோயினை வையாமல் அதற்கு நன்றியினைச் சொல்லுகிறாரென்றால் அப்பரின் சிந்தனை வித்தியாசமானதுதானே !

பொய்வாய்மை பெருக்கிய புன்சமயப்
பொறிஇல் சமண்நீசர் புறத்துறையும்

அவ் ஆழ்குழியின் கண்விழுந்து எழும் ஆறு
அறியாது மயங்கி அவம்புரிவேன்
மைவாச நறுக்குழல் மாலையாள்
மணவாளன் மலர்க்கழல் வந்தடையும்
இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக்கு
எதிர்செய் குறை என்கொல்

இப்படிச் சொல்லுவதற்கு யாரால் முடியும் ? அப்பர் ஒருவரால்த்தான் முடியும். அதனால் அவர் உயர்ந்தே நிற்கிறார். சூலை வந்த படியால்த்தான் , புன்சமயத்தை விட்டு வெளிவரவும். அறிவானது தெளிவுற்று , நற்பாதை வழி காணவும், உயர்பொருளான அந்தப் பரம்பொருளின் பாதங்களைப் பற்றவும் முடிந்தது என்னும் மனத்தெளிவும் ஏற்பட்டது என்று சொல்லும் அளவுக்கு அப்பர் இருந்திருக்கிறார் என்பது அடியவர்கள் அனைவருக்கும் ஏன் சமூகத்துக்குமே காட்டப்படும் புதுக் கருத்தாய் மலர்கிறதல்லவா !

சமயத்தில் புரட்சி , சமூகத்தில் புரட்சி என்று அப்பரின் புரட்சிகள் வளர்ந்து கொண்டே போவதைக் காணமுடிகிறது. அரசை எதிர்த்தார். பெரிய அமைப் பாய் அக்காலத்தில் இருந்த சமணத்தையே எதிர்த்து துணிவுடன் உண்ணா நோன்பினைக் கைக்கொண்டு உறுதியுடன் தனது எண்ணத்தை நிலை நாட் டுகிறார். பிற்காலத்தில் அண்ணல் காந்தி உண்ணா நோன்பினைக் கைக் கொள்ளவும் , அவரைத் தொடர்ந்து பலரும்

தொடர்ச்சி 9ம் பக்கம்...........

# நாமார்க்கும்...

8ம் பக்கத் தொடர்ச்சி...........

பல சந்தர்ப்பங்களில் உண்ணா நோன்பினைக் கைக்கொள்ளவும் முன்னோடியாக அப்பர் விளங்குகிறார் என்பதும் மனங் கொள்ளத்தக்கது.

துணிவான எண்ண்ணங்களை மனத்திலே நிறைத்து வைத்தவராய் அப்பர் பெருமான் இருந்திருக்கிறார் என்பதைக் கட்டாயம் சொல்லியே ஆக வேண்டும். அந்தவகையில் அவரின் எண்ணமாய் மலரும் இக்கருத்து யாவரை யும் சற்று திகைப்புடன் திரும்பிப் பார்க்க வைத்திடும் கருத்தாகவே அமைகிறது எனலாம். ஆண்டவன் அடியார்களுக்கு அவர் கொடுக்கும் உயரிய நிலை இங்கே காட்டப்படுகிறது.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ
மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ
யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே

என்னதான் செல்வமும் ,செல்வாக்கும் , உயர்நிலையும்வாய்த்தாலும்ஆண்டவன்அடியவராய் இல்லார் எதுவுமே இல்லார்தான்.என்று கூறி - எந்த ஒரு நிலையில் இருந்தாலும் அவர்கள் ஆண்டவனின் அன்புக்கு உரிய வரானால் அவர்களே வணங்கத் தக்கவர்கள் என்று சொல்லும் அப்பரின் சிந்தனை சமயத்தில் தோற்றுவிக்கப்பட்ட புதிய சமூகச் சிந்தனையாக எழுகிறதல்லவா !

சமணத்தில் பல தத்துவங்கள் இருக்கின்றன. அறநூல்கள் பலவற்றின் ஆசிரியர்களாக சமண ஆளுமைகள் பலர் இருக்கின்றார்கள் என்பதை எவரும் மறுத்துரைத்துவிடல் முடியாது. ஆனால் உலகியல் வாழ்வில் இசையினையும் , இல்லறத்தினையும், பெண்களையும் , கலைகளையும் , அழகினையும், சமணம் ஒதுக்கியது மட்டுமல்ல வெறுப்புடனுமே பார்த்தது. இந்த நிலை அப்பருக்கு உடன்பாடாக அமைவதாக இல்லை. இவை அனைத்தையும் சைவம் அணைத்தே நின்றது. அப்பரும் அவற்றை அகமிருத்தி தன்னு டைய சிந்தனைகளை மலர்ந்திடச் செய்து நின்றார். அதன் ஒரு நிலைதான் இசையோடு உகந்த திருமுறைப்பாடல்களாகும்.ஏழாம்நூற்றாண்டில்தமிழ் இசையினைக் காத்திட வந்த பேராளுமையாகவே அப்பர் எழுகின்றார். அவரினால் பக்தி இலக்கியப் பரப்பில் ‘ திருத்தாண் டகம் ‘ என்பது புதுவரவாய் வருகிறது. தமிழ் இலக்கியப் பரப்பில் தாண் டகத்தை அறிமுகப்படுத்தியவராய் அப்பர் பெருமானே முன்னிற்கிறார். இவரின் இந்த புதிய அறிமுகத்தால் அமைந்த தமிழ் பக்திப் பாடல்கள் இசையுடன் பாடுவதற்கு இயைந்த தாகவே அமைகிறது. அடியவர்கள் இறைவனை ஆராக்காதலுடன் பாடிப் பரவிட இந்த இசையுடன் அமை ந்த தாண்டகப் பாடல்கள் கைகொடித்தே நிற்கின்றன. இது அப்பரினால் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றம் எனலாம். அப்பரின் இப்புது முயற்சியால் அவர் ‘ தாண்டக வேந்தர் ‘ என்று யாவராலும் அழைக்கும் நிலைக்கு ஆளாகியும் விட்டார்.அப்பரினால் தமிழ் இசை வெள்ளம் தமிழ்ச் சமூ கத்தில் பெருக்கெடுக்கத் தொடங்கியது எனலாம். இந்தத் தொடக்கமே பின்னாளில் அண்ணாமலைச் செட்டியாருக்கு தமிழிசையில் ஊக்கத்தையும் ஆக்கத்தையும் ஊட்டியிருக்கிறது என்பதும் நோக்கத்தக்கது.

கையிலே ஆயுதம் ஏந்தி சமயவழி நின்றவரும் அப்பர்தான். அவரின் கையில் உழவாரம் என்னும் ஆயுதம் இருந்தது. இது கொல்லும் ஆயுதம் அல்ல. அருள் தன்னைக் கொள்ளும் ஆயுதமாகவே அமைந்திருந்தது. தொண்டின் மகிமையினை உணர்த்தும் ஆயுதமாக இருந்தது. உழைப்பின் மகிமையினை உணர்த்தும் அடையாளமாகவும் இருந்தது எனலாம். அடியார்கள் வாழ்வில் அப்பரின் உழவாரம் அசையாத ஆன்மீகச் சொத்தாக அமைந்தது எனலாம். என்கடன் பணி செய்து கிடப்பதே என்பதை உணர்த்தி நின்றது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

‘ ஆலயம் தொழுவது சாலவும் நன்று ‘ என்பதை மிகவும் சிறப்பாக அப்பர் காட்டி , அங்கு சென்று என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று யாவருக்கும் நல்ல பாடத்தைப் போதிக்கும் நல்லாசி ரியனாகவும் விளங்கி நிற்கிறார்.

‘நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே
நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம்
ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே. ‘

நிலை பெறுவதற்கு அப்பர் காட்டும் இந்த வழி ஆன்மீகத்தில் மிகவும் முக்கிய வழியாகும் என்பதைக் கருத்திருத்தல் வேண்டும்.

திருவங்கமாலை என்னும் ஒரு புதிய சிந்தனையை அப்பர் எமக்கெல்லாம் தருகிறார். கோவில் வழிபாட்டின் எங்கள் உடலின் முக்கியத்துவத்தை இங்கே அட்டவணைப்படுத்தி கிளிப்பிள்ளைக்குப் பாடம் கற்பிப்பதுபோல் பக்குவமாய் அருமையான பாடல்களாய்தந்துஅடியார்களில்முன்னிற்பவராய் அப்பர் ஆகி நிற்கிறார்.மற்றைய அடியார்கள் காட்டாத புது முயற்சி இது எனலாம்.




தலையே நீ வணங்காய்
கண்காள் காண்மின்களே
செவிகாள் கேண்மிங்களோ
மூக்கே நீ முரலாய்
வாயே வாழ்த்துகண்டாய்
நெஞ்சே நீ நினையாய்
கைகாள் கூப்பித்தொழீர்
ஆக்கை யாற்பயனென்
கால் களாற்பயனென்
உற்றார் ராருளரோ

உற்றார் ராருளரோ
உற்றார் ராருளரோ
உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால்
நமக்குற்றார் ஆருளரோ

இவ்வாறு வழிபட வழிகாட்டுவது அப்பருக்குரித்தான புதுக்கருத்தாக பார்க்க வேண்டி இருக்கிறது.

இனிப்பிறவியே வேண்டாம் என்றுதான் அடியார்கள் பலரின் நிலையாக இருந் தது. ஆனால் அப்பர்மட்டும் தனக்கு மனிதப் பிறவி வேண்டும் என்று ஆண்டவனிடம் வேண்டும் வித்தியாசமான சிந்தனையுடைய அடியவராய் விளங்குகின்றார்.

குனித்த புருவமும், கொவ்வைச்
செவ்வாயில் குமிண் சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம் போல்
மேனியில் பால் வெண் நீறும்,
இனித்தம் உடைய எடுத்த
பொன்பாதமும் காணப் பெற்றால்
மனி(த்)துப் பிறவியும் வேண்டுவதே, இந்த மா
நிலத்தே!

ஆண்டவனின் அழகான தோற்றப் பொலிவினைக் காட்டி அதனைக் காண் பதற்காகவே இந்த மாநிலத்தில் மனிதப் பிறவி வேண்டும் என்னும் சிந்த னை புதுமையாய் மலர்கிறதல்லவா !

நமச்சிவாய வாழ்க என்று பிற்காலத்தில் மணிவாசகர் மொழிவதற்கும் அப்பர் வழிகாட்டி இருப்பாரோ என்றும் எண்ணக்கிடக்கிறது.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்

பொற்றுணைத் திருந்தடி பொருந்தக்
கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே
இல்லக விளக்கது விருள்கெ டுப்பது

சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே

நமச்சிவாய என்று சொல்லும் பொழுது என்னதான் இடைஞ்சல்கள் வந் தாலும் அத்தனையும் வந்த இடந்தெரியாமல் மறைந்தே விடும் என்னும் நம்பிக்கையை அப்பர் அகமிருந்து காட்டி நிற்பதும் நல்ல சிந்தனையாக அமைகிறது அல்லவா !

அடியார்கள் பலர் தமக்கு அதுவேண்டும் இது வேண்டும் என்ற கேட்ட இட த்தில் எந்தப் பொருளுமே கேட்கா நின்றவர் அப்பர் பெருமான் மட்டுமே. அவர் கேட்டது மனிதப் பிறவி ஒன்றை மட்டுமே. அதுவும் அந்தப் பெருமா னைக் கண்களால் காண்பதற்காகவே. ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கு பவராய் அப்பர் இருந்தார். அடியார்கள் பலர் அனுபவிக்காத பல தண்டனை களுக்கு ஆளானவரும் அப்பரே. சமணர்களால் தூண்டப்பட்ட அரசனின் பல தண்டனைகளைக் கண்ட அடியவராகவும் அப்பரே இருக்கிறார். வாழ்க்கைத் தத்துவங்களை அதாவது நிலையாமை பற்றிய பல கருத்துக்களை எடுத்து மொழிந்த நிலையிலும் அப்பர் முன்னிற்கிறார் எனலாம். அதற்குக் காரணம் அவருக்கு கிடைத்த வாழ்வியல் அனுபவங்களே ஆகும். இன்று அல்லல்பட்டு ஆற்றா நிற்கும் பலருக்கும் உகந்த ஆறுதலை, தேறுதலை அளி க்கும் அர்த்தநிறை சிந்தனைகளை அப்பர் தன்னுடைய பாடல்களில் காட் டுகிறார் என்பதை மறுத்துரைத்திடல் இயலாது. அப்பர் என்றால் அனுபவம் என்றுதான் சொல்ல வேண்டும். பற்றற்ற அடியார். ஆனால் பரமனைப் பற்றி நின்ற அடியார். புரட்சியை விதைத்த அடியார்.புதுமையைப் புகுத்திய அடியார்.‘ எல்லா உலகமும் ஆனாய் நீயே ‘ என்று விழித்துரைத்த அடி யார்.அப்பர் என்பவர் தமிழராய் விளங்கி தமிழையே அகமிருத்தி தமிழி னால் இறை புகழைப் பரப்பி தமிழ்ப் பக்தி இயக்கத்தில் தலைநிமிர்ந்து நிற்கிறார் என்பதை யாவரும் மனமிருத்துவது அவசியமாகும்.

விண்ணுளார் தொழுதேத்தும்
விளக்கினை
மண்ணுளார் வினை தீர்க்கும்
மருந்தினைப்
பண்ணுளார் பயிலுந் திருக்கோளிலி
அண்ணலார் அடியே தொழுதுய்மினே
சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம்என் னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே .

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மருத்துவருக்கு கொலை அச்சுறுத்தல்

## பொலிஸார் எந்த நடவடிக்கையும் இல்லை என மருத்துவ சங்கம் குற்றச்சாட்டு

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடமையிலிருந்த மருத்துவர் ஒருவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸில் முறையிட்டும், உரிய நடவடிக்கை எடுக்கப்படாதமை தொடர்பாக பதில் பொலிஸ் மா அதிபர் கவனத்துக்குக் கொண்டுசென்றுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

கடந்த 2 ஆம் திகதி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்ற ஒருவரை சாதாரண சிகிச்சைப் பிரிவு விடுதிக்கு மாற்ற முற்பட்டபோது, அந்த நோயாளியின் நெருங்கிய உறவினர் ஒருவர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அத்துடன், மேற்படி நோயாளிக்கு வழக்கமாக வழங்கப்படாத வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் வலியுறுத்தினார். அத்துடன், மருத்துவரின் கருத்துக்களையும் மீறி தமக்குத் தெரிந்தவர்களையும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அழைத்துச் சென்றார். இதையடுத்து அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்தவர்களை மருத்துவர் வெளியே செல்லுமாறு கூறினார். இதனையடுத்து மருத்துவரை மிரட்டும் பாணியில் அவர் நடந்துகொண்டார்.

இதுதொடர்பில் அன்றையதினமே தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு வைத்தியசாலை நிர்வாகத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், இரண்டு வாரங்கள் கடந்தும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலைமையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் பதில் பொலிஸ் மா அதிபர் கவனத்துக்குக் கொண்டுசென்றனர்.

பதில் பொலிஸ் மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கடந்த 2 ஆம் திகதி வைத்தியசாலையில் வைத்து கடமையில் இருந்த வைத்தியர் ஒருவருக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டு இரு வாரங்கள் கடந்த நிலையிலும் சந்தேக நபர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் வைத்தியர்கள் மாத்திரமன்றி வைத்தியசாலையின் ஏனைய பணியாளர்களும் உயிருக்கு உத்தரவாம் இன்றிய அச்சம் மிகுந்த சூழலிலேயே கடமையாற்றுகின்ற நிலைமையே அங்கு உள்ளது. - என்றுள்ளது.

# தேர்தல் முன்னாயத்த கலந்தாய்வு திருகோணமலை செயலகத்தில்

(ஹஸ்பர்)

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் தொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கான முன்னாயத்த கலந்துரையாடல் இன்று திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான டபிள்யூ. ஜி.எம் ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.



உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின் போது பிரதேச செயலாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.





இக்கலந்துரையாடலில் மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் எஸ். கே. டி. நிரஞ்சன் மற்றும் பிரதேச செயலாளர்களும் கலந்து கொண்டனர்.




# உள்ளாட்சி தேர்தல் 2025

## ஐந்து தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் வேட்பாளர்கள் அறிமுகக்கூட்டத்தில்

### திருக்கோவிலில் அரசியல் எழுச்சி

( சகாதேவராஜா)

ஐந்துதமிழரசுக்கட்சிபாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற திருக்கோவில்பிரதேசவேட்பாளர்கள் அறிமுகக்கூட்டமும் பொதுக் கூட்டமும் (20) ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச இலங்கைத்தமிழரசு கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வும் மாபெரும் பொது கூட்டமும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன்



தலைமையில் அக்கரைப்பற்று தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்க திருக்கோவில் தம்பிலுவில் வளாகத்தில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன்( கட்சியின் பதில் செயலாளர்), இரா.சாணக்கியன், ஞா.சிறிநேசன், டாக்டர் இ.சிறிநாத் மற்றும் கவி.கோடீஸ்வரன் ஆகியோர் பிரதான அதிதிகளாக கலந்து சிறப்பித்தார்கள்.

கட்சியின் கல்முனை தொகுதி



அமைப்பாளர் அ.நிதான்சன் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

## மகிந்தவின் ஆட்சியில்கூட இதுபோன்று தேர்தல் விதி மீறல்கள் நடந்ததேயில்லை

### முன்னாள் மேயர் மணிவண்ணன் விளாசல்

மகிந்தவின் அடக்குமுறை ஆட்சியில் கூட தற்போது போன்று அப்பட்டமான முறையில் தேர்தல் விதிமுறைகள் மீறப்படவில்லை என சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி எனக் கூறிக்கொள்ளும் ஜே.பி.வியினர் அப்பட்டமான முறையில் தேர்தல் விதிமுறைகளை மீறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறி ஆலயங்களில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எமக்கு வாக்களித்தாலே உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி ஒதுக்குவோம் எனப் பகிரங்கமாக மேடையில் ஜனாதிபதி மக்களை அச்சுறுத்தும் வகையில் கருத்துக் கூறுகின்றார்.

காரைநகர் பிரதேச சபை செயலர் , சபையின் உத்தியோகபூர்வசமூகவலைத்தளங்களில்தேசியமக்கள் சக்தியினருக்கு ஆதரவாக பதிவுகள் இடுகின்றார். இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் இல்லை.

ஊழலைஒழிப்போம்,மாற்றத்தைஏற்படுத்துவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், முந்தைய அடக்குமுறையான ஆட்சியாளரானமஹிந்தவைவிட மிக மோசமாகச் செயற்படுகின்றனர்.

இவர்களின் ஆட்சி விந்தையானது. ஊழலை ஒழிப்போம் , சட்டவிரோத செயலை இல்லாமல்



செய்யவோம் என கூறியவர்கள் தற்போது தம்முடன் போலியான நபர்களையும் , சட்டவிரோத செயலில் ஈடுபடுபவர்களையும் இணைத்து வைத்துள்ளனர்.

காரைநகர் பிரதேச சபையின் ஆளும்தரப்பு வேட்பாளர் ஒருவர் அண்மையில் சட்டவிரோதமான முறையில் மணல் கடத்தலில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்டார் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தது. எனவே மிக மோசமான இந்த ஆட்சியாளர்களை எமது மண்ணில் கால் ஊன்ற மக்கள் அனுமதிக்கக் கூடாது என உரிமையோடு கேட்கிறோம் - என்றார்.

## இலங்கை தமிழ் காங்கிரஸுக்கு உதயன் சரவணபவன் ஆதரவு

உள்ளூராட்சி தேர்தலில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸிற்கே தனது ஆதரவு என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் பத்திரிகை நிறுவனத்தலைவருமான சரவணபவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது: நாடாளுமன்ற தேர்தலைத் தொடர்ந்து நான் மிகவும் அமைதியாக இருந்தேன். பலரும் என்னை அனுகினார்கள். இருந்த பொழுதிலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலானதமிழ் தேசிய மக்கள் முண்ணனிக்கு எனது ஆதரவை வழங்கியுள்ளேன்.

தமிழ்த் தேசியத்தை எந்தவித சலனமும் இல்லாது கொண்டு செல்லுகின்ற ஒரு தரப்பு தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாத்திரம் ஆகும். இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்காக உழைத்தவர்களை அவர்கள் விலக்கி வைத்தார்கள். ஒரு தனிநபருக்கு இருக்கின்ற நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் கிடைக்க கூடிய அதிகளவு வாக்குகளையும் கருத்திற்கொள்ளாது சில நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. மத்திய குழுவும் அந்த தனி நபரின் பின்னால் சென்றுள்ளது. தமிழ் அரசுக் கட்சியின் தலைமைத்துவ தேர்தலின் பொழுது பலரும் சிறீதரனுக்கு ஆதரவளித்தார்கள். தன்னை ஆதரித்தவர்களுக்காகத் துணிவாக இறங்கி குரல் கொடுக்க வேண்டிய அவர் அதனை தவறவிட்டுவிட்டார்.

நிலையானதமிழ் தேசியம், இளைஞர்களுக்கான அரசியல் என அனைத்து விடயங்களும் கஜேந்திரகுமார் அணியில் உள்ளன. தமிழர்களை ஒரு கட்டுக்கோப்பிற்குள் கொண்டுவரவேண்டும் என அவர் முயற்சிகளை எடுத்துள்ளார். நாம் சுக்குநூறாக உடைந்து நிற்கின்றோம் .

கொழும்பிலிருந்து வரும் தேசிய கட்சிக்கு நாம் வாக்களிக்க முடியாது.

தேசிய கட்சி ஒன்று இன்று கனவிலும் நினைக்க முடியாத அளவிற்கு கால் பதித்துள்ளது. மக்களின் குழப்பத்திற்கு தனியே தேசிய மக்கள் சக்தி மாத்திரம் காரணம் அல்ல. மாறாக எம்முடைய பிரிவுகளும் காரணம்.

எங்களுடைய வடக்கு கிழக்கை பிரித்தவர்கள் ஜேவிபியினர். தமிழர்களாகிய நாம் நல்லதொரு எதிர்காலத்தை எதிர்கொள்ள வேண்டுமானால் உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசிய கட்சிகளுக்கு வாக்கினை வழங்கவேண்டும்.

இப்போது இருக்கின்ற ஆளும்தரப்பால் வடக்கில் ஓரளவுக்கு காலுன்றினாலும் மட்டக்களப்பில் கால் ஊன்ற முடியவில்லை. அதனாலேயே பிள்ளையானைக் கைது செய்தார்கள். இந்தக் கைது நாடகம் மூலம் வாக்குகளைப் பெறலாம் என்று நினக்கிறார்கள்.-- என்றார்.

### பொத்துவில் பிரதேச சபை

## விக்டர் தோட்ட வட்டாரத்தில் வீட்டுக்கு வீடு தீவிர பரப்புரை

(ஸாகிர்)

பொத்துவில் பிரதேச சபைக்கான விக்டர் தோட்ட வட்டார வீட்டுக்கு வீடு தேர்தல் பிரசாரம் இன்று (22) செவ்வாய்க்கிழமை விக்டர் தோட்ட வட்டார வேட்பாளர் றஸாக் றாபி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், திகாமடுல்ல மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினரும், பிரதேச செயலகங்களின் அபிவிருத்தி குழு தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பொத்துவில் பிரதேச அமைப்பாளர் ஆதம் சலீம், தேசிய மக்கள் சக்தியின் பொத்துவில் பிரதேச செயற்பாட்டாளர்களான தானிஸ் மற்றும் பஹாத், பொத்துவில் பிரதேச சபை வேட்பாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

## வவுனியா மாநகர வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் கூட்டத்தில் பிரதமர்

வவுனியா மாநகரசபை வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கலந்து கொண்டார்.

வவுனியா மாநகரசபை மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை வேட்பாளர்களை ஆதரித்து வவுனியா, உக்குளாங்குளம் சீர்திருத்த விளையாட்டு கழக மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பங்கேற்றார்.





இப் பொதுக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், வேட்பாளர்கள்,பொது மக்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 100







## சகல இன மக்களையும் அரவணைத்து செல்கின்றமையே எமது நோக்கமாகும்

### முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் பிரசார தலைவர் உறுதி

(றிபாஸ்).

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக பாலமுனை பிரதேசத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகமும், மக்கள் சந்திப்பும் அண்மையில் இடம்பெற்றது.






கட்சியின் பாலமுனைப் பிரதேச தேர்தல் குழு தலைவர் எஸ்.எம்.நபீல் ஆசிரியர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, பாலமுனை பிரதேச அமைப்பாளரும், வேட்பாளருமான ஏஎல்எம். அலியார் உட்பட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், பிரதேச அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு அமைப்பாளர் ஏஎல்எம். அலியார் கலந்துகொண்டு ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் -

ஆண்டாண்டுகாலமாகஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு நூறு வீதம் வாக்களிக்கின்ற ஒரு பிரதேசமாக பாலமுனை பிரதேசம் இருந்து வந்துள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அவ்வாறே வாக்களித்து என்னையும் வெற்றி பெறச்செய்வதன் மூலம் இன,மத வேறுபாடுகளுக்கப்பால் எல்லோரையும் அரவணைத்துக் கொண்டு முடியுமான அபிவிருத்தி பணிகளையும், வாழ்வாதார திட்டங்களையும் முன்னெடுக்க முடியும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் வழிகாட்டலின் கீழ் அதிகமான உள்ளூராட்சி மன்றசபைகளை கைப்பற்றுவதுடன் அட்டாளச்சேனை பிரதேச சபையை ஸ்ரீ ல.மு.காங்கிரஸ் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை எனவும் தெரிவித்தார்.



## மக்கள் விரும்புகின்ற ஒரு நாடாக இலங்கையை மாற்றிக்காட்டுவோம்

### ஜெகதீஸ்வரன் எம்.பி. கூறுகிறார்

மக்கள் விரும்பும் நாடாக இலங்கையை மாற்றிக் காட்டுவோம் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்திருக்கின்றது. இங்கு இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு இடமில்லை. எமது நாட்டை பொருளாதார ரீதியாக அபிவிருத்திக்காக உழைக்கின்றோம். மக்கள் விரும்பும் நாடாக மாற்ற முயல்கின்றோம்.

தற்போது பல கட்சிகள் போலியான பிரசாரங்களை முன்வைக்கிறார்கள். நாங்கள் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க அவர்களுடன் கைகோர்த்து நிற்கின்றோம். வடக்கிற்கு முதலாவதாக அதிக நிதியை ஒதுக்கிய கட்சி எமது தேசிய மக்கள சக்தி தான். அந்தக் கட்சி தமிழ் மக்களையும் கவனிக்கிறது.



கடந்த காலங்களில் வெற்றி பெற்ற அமைச்சர்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை நீங்கள் சந்திப்பதாக இருந்தால்எவ்வளவுசிரமப்பட்டிருப்பீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் இன்று அப்படி இல்லை.

மிக விரைவில் உங்கள் வீடு தோறும் நாம் வருவோம். உங்கள் பிரச்சினைகளைக் கேட்போம். அதனைத் தீர்த்து வைப்போம். போலியான பிரச்சாரங்களை நம்பி ஏமாறாதீர்கள். வவுனியா திருச்செந்தூர் மில் வீதியை 43 மில்லியன் ரூபாய் ஒதுக்கி திருத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபைகள் மக்களிடம் வாடகையை அறவிட்டும், வரியை அறவிட்டும் ஒரு வங்கிகள் போல செயற்பட்டன எனத் தெரிவித்தார். 100

## நிந்தவூர் மீரா நகர் வட்டார பிரசார கூட்டம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நிந்தவூர் பிரதேச சபைக்கான மீரா நகர் வட்டார பிரசார கூட்டம் திங்கட்கிழமை மீரா நகர் வட்டார வேட்பாளர் முஹம்மத் அலி தலைமையில் அவர்களது இல்ல வளாகத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச செயலகங்களின் அபிவிருத்தி குழு தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மேலும் தேசிய மக்கள் சக்தியின் நிந்தவூர் பிரதேச அமைப்பாளர் தோழர் சம்சுன் அலி, மீரா நகர் வட்டார பட்டியல் வேட்பாளர் தோழர் சரூக் நிந்தவூர் பிரதேச சபை வேட்பாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இனவாதமில்லை, மதவாதமில்லை என்று கூறும் இன்றைய அரசு சிறுபான்மையின மக்களின் இருப்பை கேள்விகுறியாக்கியுள்ளது

## பத்திராஜா வசன்பிள்ளை தெரிவிப்பு

(எஸ்.இரவிந்திரன்)

இனவாதமில்லை, மதவாதமில்லை என்று கூறிக்கொண்டு இன்றைய அரசாங்கம் இலங்கை வாழ் சிறுபான்மையின மக்களின் இருப்பை கேள்விகுறியாக்கி வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாநகர சபையின் வேட்பாளரும் முன்னாள் உறுப்பினருமான எம்.பி. பத்திராஜா வசன்பிள்ளை கூறினார்.

இரத்தினபுரி நகரில் 21 ஆம் திகதி மாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைக் கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது-

இன்றைய அரசாங்கம் பதவியேற்று சொற்பகாலத்தில் வடக்கு கிழக்கு மலையகம் உள்ளிட்ட பல பகுதிகளில் காணப்படும் அரச திணைக்களங்கள் மற்றும் அதிகார சபைகளில் தகுதியுள்ள சிறுபான்மையினரை நியமிக்காது பெரும்பான்மையின சிங்களவர்களையே நியமித்து வருகின்றது என சில ஊடகங்கள் தகவல் வெளியிட்டு வருகின்றன.

இது குறித்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறுபான்மையின அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவ்விதமான கருத்துகளையும் தெரிவிக்காமல் வாய் மூடி மௌனியாகவுள்ளனர்.

இதனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான சிறுபான்மையின நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் சிறுபான்மையினருக்கு மட்டும் சொந்தமில்லை. இலங்கைவாழ் அனைத்து இனமக்களுக்கும் சொந்தம் என்கின்றனர். ஆனால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பெருமபான்மை;யின நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாங்கள் சிங்களவர்களுக்கு மட்டும் சொந்தமில்லை நாட்டிலுள்ள அனைவருக்கும் சொந்தமானவர்கள் என்று கூறுகின்றார்களா? இல்லை இது ஏன் எமது சிறுபான்மையின மக்களுக்கு குறிப்பாக தமிழ் மக்களுக்கு புரியவில்லை என்பது எனக்கு தெரியவில்லை. இந்த பல்லவியை பெரும்பான்மையின இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மாத காலமாகி விட்ட நிலையில் இந்நாட்டில் உள்ள சிறுபான்மையினமக்களின் ஏதாவது ஒரு பிரச்சினைக்கு பதில் கிடைத்துள்ளதா? இல்லை.

இரத்தினபுரி மாவட்டத்தில் எமது இருப்பை தக்க வைத்து கொள்ள நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இரத்தினபுரி நகரில் கடந்த பல வருடங்களாகபல்வேறு சமூக மற்றும் அத்தியாவசிய அடிப்படை பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து வருகின்றோம்.

அந்த பிரச்சினைகளுக்கு தமிழ்பிரதிநிதித்துவம் மூலமே ஓரளவுக்கேனும் தீர்வு காணப்பட்டது. எனினும் இம்முறை எமது தமிழ் பிரதிநிதித்துவத்தை



இழக்கும் பட்சத்தில் மீண்டும்நாம் அநாதையாகி விடுவோம்.

எனவே எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களித்து தமிழ் பிரதிநதித்துவத்தை உறுதிப்படுத்வோம்.

## தேசமானிய பாரிஸ் ஐ.ம.முன்னணியில்

(ஸாகிர்)

ஐக்கிய மனித உரிமைகள் அமைப்பின் தலைவரின் அம்பாறை மாவட்ட இணைப்புச் செயலாளரும் மயோன் சமூகசேவை அமைப்பின் சம்மாந்துறை அமைப்பாளருமான சுகாதார சேவை உதவியாளர் தேசமானிய ஏ.எம்.எம்.பாரிஸ் (ஜே.பி) ஐக்கிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் ஏ.எம்.நௌஷாட் மற்றும் கட்சியின் கொள்கை பரப்பு தேசிய அமைப்பாளர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.எல் துல்கர் நயீம் ஆகியோர் முன்னிலையில் தேசிய மக்கள் முன்னணி தலைவரும் நாபீர் பவுண்டேஷனின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான பொறியியலாளர் கலாநிதி உதுமான் கண்டு நாபீருடன் ஐக்கிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக கடந்த திங்கட்கிழமை இணைந்து கொண்டார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முழுமையாகப்பயணித்துசபையைகைப்பற்றுவதற்கு தான் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.04.2025இல் வெளியிடப்பெற்றது